செய்திக்குறிப்பு எண்: 45

நாள்: 15-03-2010

18.3.2010 குமுதம் ரிப்போட்டர் வார இதழில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குறித்து அவ்வாரியத்தின் A.I.TU.C சங்கத்தின் மாநில துணைத் தலைவர் திரு.கே.கே.என். ராஜன் அவர்கள் குறிப்பிட்டதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இது குறித்து, பின்வரும் தகவல்கள் அளிக்கப்படுகின்றன.

15.2.2010 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயல்படுத்தும் திட்டப்பணிகளுக்கு வசூலிக்கும் சென்டேஜ் கட்டணத்தை 5 சதவீதமாக நிர்ணயித்து ஆணை வெளியிட்டது. இது தொடர்பாக, மேற்கூறிப்பிட்ட தகவல்கள் பத்திரிக்கையில் வெளியாகி உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மாநில திட்ட அனுமதிக் குழு, முன்னரே சென்டேஜ் கட்டணத்தை 5 சதவிகிதமாக குறைக்க ஒப்புக் கொண்டது. பின்னர், தமிழ்நாடு மூன்றாவது மாநில நிதி ஆணையமும் அவ்வாறே பரிந்துரை செய்தது. பின்னர், இது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மே 2007ல் அறிக்கை வாயிலாக, பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே மேலே குறிப்பிடப்பட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆணை 15.2.2010 முதலே அமலுக்கு வரும் என்பதால், இதற்கு முன்னர் ஒப்பளிக்கப்பட்ட ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம் உள்ளிட்ட திட்டங்களுக்கு இது பொருந்தாது. எனவே இத்திட்டத்தினால் மட்டுமே ரூ.300/– கோடி சென்டேஜ் இழப்பு ஏற்படும் என்பது தவறான தகவலாகும்.

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயல்படுத்தும் பணிகளுக்கு ஒரே சீராக 5 சதவீதம் சென்டேஜ் கட்டணம் வசூலித்து வருவதால், தற்போதைய ஆணையின்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும்

1/2

குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் இரண்டு வாரியங்களும் ஒரே சீராக 5 சதவீதம் சென்டேஜ் கட்டணம் வசூலிக்கும் நிலை எழுந்துள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்டத்தின் படி சிறப்பு நிலை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தவிர, ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மட்டுமே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவே குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை கட்டாயமாக செயல்படுத்த வேண்டும். இந்த ஆணை வெளியிடப்பட்டதன் காரணமாக, அனைத்து சிறப்பு நிலை நகராட்சிகளும் மற்றும் மாநகராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவே மேற்கண்ட பணிகளை செயல்படுத்த முன்வரக்கூடிய நிலை எழுந்துள்ளது. இதனால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு படிப்படியாக கூடுதல் வருவாய் வரக்கூடிய நிலை எழும்.

மேலும் இந்த சென்டேஜ் கட்டணத்தை 5 சதவீதமாக சீரமைத்ததனால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தற்போது ஏற்படும் நிதியிழப்பினை ஈடுகட்ட அரசு முடிவெடுத்து தக்க கருத்துருக்களை அனுப்புமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரை கோரியது. அவரும் தக்க கருத்துருக்களை அரசுக்கு அனுப்பியுள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

இதிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நலனோ, அவ்வாரிய பணியாளர் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலனோ எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது என்பது புலனாகும்.

பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்கு புறம்பானது என்பதுடன் மக்களிடையே தவறான தகவல்களை அளித்து அரசிற்கு அவப்பெயர் ஏற்படச் செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

15/3/10
Secy (MAWS)